அனுப்புனர்:-

பெறுநர் :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்  அவர்கள்

தலைமைச் செயலகம்

சென்னை - 600009

**பொருள் : தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தின்2020 ஆம் ஆண்டிற்கான காலி பணியிடங்கள் அறிவிப்பு விரைவில் அறிவிக்க வேண்டி விண்ணப்பம்**

ஐயா

மதிப்பிற்குரிய **உயர்திரு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுக்கு வணக்கம்   மாண்புமிகு தமிழ்நாடு **துணை முதலமைச்சர் திரு பன்னீர்செல்வம்** அவர்களால் **2020 2021** ஆம் ஆண்டிற்கான தமிழக பட்ஜெட் கூட்டத்தொடரில் 10000-கும் மேற்பட்ட காவலர் பணியிடம் நிரப்பப்படும் என அறிவித்தார். கொரோனா காலத்தில் அறிவிப்பாணை  வெளியாக தாமதமாவதால் இந்த சூழ்நிலை பயன்படுத்திக்கொண்டு 2019 இறுதி பட்டியலில் தேர்ச்சி பெறாதவர்கள் தங்களைப் பணியில் அமர்த்தும் மாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். ஆனால் இது **5.5 லட்சம் (5×4= 20 லட்சம் அவர்களின் குடும்பத்தையும்சேர்த்து**)  புதிய தேர்வர்களின் மனநிலையை பாதிக்கும். **ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால்திறமையான நபர்கள் மட்டும்**

**தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்**இறுதிச்சுற்றில் தகுதியின்மை காரணமாக வெளியேறியவர்கள் எங்களுக்கு (**5.5 லட்சம் இளைஞர்களுக்காக**) அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களை கேட்பது எங்களது உரிமைகள் மறுக்கப்படுவதை போல் உள்ளன. மேலும் அவர்கள் மேற்கோள் காட்டும் வருடங்களில் எந்த ஒரு **மறு வாய்ப்பும் வழங்கப்படவில்லை** 5.5 லட்சத்திற்கு மேல் விண்ணப்பதாரர்கள் உள்ளதால் (**5.5*130 Exam Fees = 7.15 கோடிவருவாய்** )அரசுக்கு எந்த ஒரு நிதி நெருக்கடியும் ஏற்படாது மேலும் அறிவிப்பாணை வெளியிட்டவுடன் தேர்வு நடத்தப்பட போவதில்லை **குறைந்தபட்சம்4 முதல் 6 மாதங்களாவது** ஆகும் அதற்குள் **தமிழக அரசு மற்றும் இந்திய அரசு இந்தக் கொரானா வைரஸை ஒழித்துக்கட்டும்**என நம்புகிறோம் **மாண்புமிகு புரட்சித்தலைவிஅம்மா** அவர்களின் ஆசிர்வாதத்துடன் செயல்படும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உயர்திரு எடப்பாடி பழனிச்சாமி ஐயா** தாங்கள் தான் ஆராய்ந்து எங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைத்துத் தருமாறு தங்கள் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

இப்படிக்கு

நாள் :-

இடம் :-